பைபிள் சித்திரக் கதைகள்-41

# இயேசு கிறிஸ்து - 11

## வழி



# வழி

முதல் மூன்று நற்செய்திகளும், இயேசு தமது பொதுப்பணியின் முடிவில், தமது இறப்பை நோக்கிப் பீடுநடை போடும் மனவுறுதியோடு எருசலேமுக்குப் பயணம் செய்தார் என்று கூறுகின்றன. மறுபுறம் நான்காவது நற்செய்தி, இயேசு பலமுறை எருசலேமுக்குப் பயணம் செய்தார் என்று கூறுகிறது. ஆயினும் யோவான், இயேசுவின் வாழ்க்கையைத் தந்தையிடமிருந்து வந்ததில் தொடங்கி அவரிடம் திரும்புவதில் முடியும் ஒரு பயணமாக விவரிக்கிறார். நம்மை விண்ணகத் தந்தையிடம் நடத்திச்செல்லும் பொருட்டு இயேசு இவ்வுலகுக்கு வந்தார்.

இயேசுவின் பூவுலக வாழ்வைப்போலவே, நமது வாழ்வும் தந்தையின் வீட்டை நோக்கிய ஒரு திருப்பயணமாகும். அதில் இயேசுவே நமக்கு வழிகாட்டு கிறார். ஆனால், இயேசு வெறும் சுற்றுலா வழிகாட்டியல்லர். அவரே வழியாவார். அதனால்தான் இந்நூலுக்கு ''வழி'' என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூலில் இயேசுவின் எருசலேமை நோக்கிய பயணத்தை விவரிக்கிறோம்; சீடர்தன்மை பற்றிய அவரது போதகத்தைக் கொடுக்கிறோம். அப்போதகத்தை உவமைகளின் வழியாக இயேசு அளிக்கிறார். இந்நூலில் வரும் நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை ''முடிவில்லா வாழ்வை அடைய நான் என்ன செய்ய வேண்டும்?'' என்ற கேள்விக்கு விடை அளிக்கின்றன.

இயேசு அமைதியின் அரசர். மனுகுலத்தை இறைவனோடும், மனிதர்களை அவர்களுக்குள்ளேயும் ஒப்புரவாக்க அவர் வந்தார். ஆயினும், அவரது பிரசன்னம் பிளவைத் தோற்றுவிக்கிறது. இயேசுவையும் அவரது போதகத்தையும் நிராகரிப்பவர்கள் அவருடைய சீடர்களையும் நிராகரிப்பர். அவரைக் கொடுமைப் படுத்துபவர்கள் அவரைப் பின்பற்றுவோரையும் கொடுமைப்படுத்துவர். அதனால்தான், தாம் அமைதியையன்று வாளைக் கொணர்ந்ததாக இயேசு கூறினார்.

சீடர்கள் கைம்மாறோ, ஏற்றுக்கொள்ளப்படுதலோ எதிர்பார்க்காமல் நன்மை செய்ய வேண்டும். அயலார் பசியால் வருந்திச் சாகும்போது ஒருவர் சுகபோகத்தில் வாழ்வது கொடும்பாவமாகும் என்று கற்பித்தார். ஒருவர் விண்ணக விருந்தில் பங்குகொள்ள விரும்பினால், அவர் இப்போது கொண்டாடும் விருந்துகளுக்கு ஏழைகளையும் ஊனமுற்றோரையும் அழைக்க வேண்டும். பிறரை மன்னிப்பவர்கள்தான் இறைவனிடமிருந்து மன்னிப்பை எதிர்பார்க்க முடியும்.

காணாமல் போன மகன் என்ற உவமை இறைவனின் அளப்பரிய அன்பையும் மனிதன் மனத்துக்கம் அடைவதின் அவசியத்தையும் சித்திரிக்கிறது. தனது பாவத்தை ஏற்று இரக்கத்தை வேண்டுபவர் இறைவனது மன்னிக்கும் அன்பை அனுபவிப்பார். இதற்கு மாறாக, தங்களது பக்தியின்

# பைபிள் சித்திரக் கதைகள்-41

# இயேசு கிறிஸ்து - 11

# வழி

புத்தக உதவி: அலெக்சாண்டர் வாஸ்
டிஜிட்டல் ஆவணப்படுத்தல்: ஜானி

பதிப்பு: "தியாகு"

இயேசு பல புதுமைகள் செய்திருந்தாலும், மக்கள் அவரிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. எதிர்ப்பு வளர்ந்துகொண்டே இருந்தது. ஆகவே, அவர் அப்போஸ்தலர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் கவனம் செலுத்தினார்; பிறமக்களிடம் உவமைகளில் பேசினார்.




இயேசு கூறியதைச் சீடர்கள் புரிந்துகொள்ளவில்லை. அவர்கள் தங்களுக்குள் கலந்து பேசினர்.
இந்தத்தீயும் திரு முழுக்கும் என்ன?
யோவான் தீர்ப்பைத் தீ என்று குறிக்க வில்லையா? போதகர் அதைப் பற்றிப் பேசி யிருக்கலாம்
அப்படியானால் அவர் பெற வேண்டிய திருமுழுக்கு இருக்கிறது என்று ஏன் சொல்கிறார்?
இந்த அபிடேகம்தான் அவரை நீதிபதியாக்குகிறது.
அப்படியானால், போதகர் ஏன் இவ்வளவு துக்கமாய் உள்ளார்? அவர் கலக்க முற்றிருப்பதாகக் கூறினாரே
எதிரிகள் பலர் இருப்பதால் அரச அபிடேகம் செய்தல் கடினமாக இருக்கும்.
உலகம் முழுவதையும் பற்றியெரியச் செய்யும் அன்புத் தீயைப்பற்றிப் போதகர் பேசுகிறார் என்று நினைக்கிறேன்.
தீ இறைப்பிரசன்னத்தின் அடை யாளம் அல்லவா? சீனாய் மலையில் அப்படித்தானே இருந்தது!.
அப்படியானால், உலகம் முழுவதும் இறைவனது அன்பை அறிய அவர் விரும்புகிறார் போலும்.
!


ஆனாலும், இத்திருமுழுக்கு என்ன?.
யோர்தானில் ஒரு திரு முழுக்கு நடந்ததே. மற் றொரு திருமுழுக்கைப் பற்றி எண்ணிப் பார்க்கக்கூட என்னால் முடியவில்லை..
?
யோவான், இஃது என்ன? எங்களுக்கும் சொல்லும்.
கடநத இரு மாதங்களாகப் போதகர் தனது சாவைப்பற்றி நான்கு முறை பேசியுள்ளார்.
போதகர் அவ்வளவு விரைவில் சாகமாட்டார் திருமுழுக்கு அபிடேகம் அரசு அரியணை ஏறுத லைக் குறிக்கலாம்.
இருக்கலாம். ஆனால் ஒரு கொடுமையான சாவால் அது நிறைவேறும் என்று போதகர் கூறுகிறாரே!.
நம் போதகருக்கு அத் தகைய அபிடேகம் தேவையில்லை. அதை நாம் தடுத்தாக வேண்டும்.
யாரும் அதைத்தடுக்க முடியாது. தயாரிப்பெல்லாம் முடிந்து விட்டன.
என்ன தயாரிப்பு யூதாஸ்?.
?!!
காலம் வரும்போது நீங்கள் தெரிந்து கொள்வீர்கள்.


மண்ணுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தேன் என்றா நினைக்கிறீர்கள்?
உறுதியாக! போதகரே நீர் ஒருவர்தான் உலகிற்கு அமைதியை அளிக்கக்கூடும்.
இல்லை, அமைதியை அன்று பிளவு உண்டாக்கவே வந்தேன். என்பொருட்டுக் குடும்பங்களும் பிளவுபடும்.
உண்மைதான், போதகரை நான் பின்பற்றி, என் குடும்பத்தைக் கவனிக்காததால் அஃது என்னை நிராகரித்து விட்டது.
என்பொருட்டு எல்லாராலும் நீங்கள் வெறுக்கப் படுவீர்கள்.


உங்கள் பெற்றோராலும் நண்பர்களாலும் காட்டிக் கொடுக்கப்படுவீர்கள். என்பொருட்டு, அரசர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னும் அவர்கள் உங்களைக் கொண்டு வருவார்கள்.
அப்போது என்ன சொல்வது என்று கவலைப்படாதீர்கள். ஏனெனில், தூய ஆவி உங்கள் வழியாகப்பேசுவார்.
அன்பர்களே, அஞ்சாதீர்கள், மகிழுங்கள், ஆர்ப்பரியுங்கள்! ஏனெனில் நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள். விண்ணகத்தில் உம் சன்மானம் பெரிதாக இருக்கும்.
?!!!


ஒருநாள் பரிசேயருள் ஒருவர் இயேசுவை விருந்துக்கு அழைத்திருந்தார்.
இஃது என் இடம்.
Z!!!!
யாருக்கும் எந்த இடமும் குறிக்கப்படவில்லை. முதலில் வருபவர் முதல் இடத்தில் அமர்வர்.
எல்லாரும் அமர்ந்தபின்.
ராபி இயேசுவே உணவுக்குமுன் சில வார்த்தைகள் கூறுங்களேன்.
மகிழ்ச்சி, கூறுகிறேன்.


ஒருவர் உங்களை விருந்துக்கு அழைக்கும் போது, முதல் இடத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்களைவிட மதிப்பு மிக்கவர் அழைக்கப்பட்டிருந்தால் அவருக்கு உங்கள் இடத்தை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.
நீங்கள் விருந்து அளிக்கும் போது உங்கள் உறவினரையும், செல்வமிக்க அயலாரையும் அழைக்காதீர்கள்.
நமக்குச் சமநிலையும் பதவியும் உடையவர்களை அழைக்கக்கூடாதா?


அவர்களும் உங்களை அழைத்து, பதில் உபசாரம் செய்துவிடுவர்.
பதிலாக ஏழைகளையும் ஊனமுற்றோரையும், முடவர்களையும், குருடர்களையும் அழையுங்கள்.
என்ன? விருந்துக்குப் பிச்சைக்காரர்களை அழைப்பதா?
எந்த மதிப்புக்குரிய மனிதனும் அந்த விருந்தில் பங்கெடுக்க மாட்டான்.
அப்போது, நீதிமான்கள் உயிர்த்தெழும்போது நீங்கள் சன்மானம் பெறுவீர்கள்.
இறையரசின் விருந்தில் பங்கெடுப்போர் பேறுபெற்றோர்.
ஒருவர் ஒரு பெரும் விருந்தளித்தார்


விருந்துக்கு நேரம் வந்தது. அழைக்கப்பட்ட வர்களைக் கூப்பிட வேலையாட்களை அனுப்பினார்.
என் தலைவர் விருந்து தயாரித்துள்ளார் வாருங்கள்.
ஒரு நிலம் வாங்கியுள் ளேன். அதைப்போய்ப் பார்க்க வேண்டும். என்னை மன்னியுங்கள்!
மற்றொருவர்.
தயவுசெய்து விருந் துக்கு வாருங்கள்.
இப்போதுதான் திருமணம் செய்துள்ளேன்.
ஆகையால் வரமுடியாது. மன்னியுங்கள்!
அழைக்கப்பட்டவர் அனைவரும் சாக்குப் போக்குக் கூறினர். வீட்டுத்தலைவர் கடுங்கோபங் கொண்டு பணியாளரிடம் கூறி னார்.


நகரின் வீதிகளுக்கும் சந்துகளுக்கும் விரைந்து சென்று ஏழைகள், உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர் மற்றும் கால் ஊனமுற்றோரை இங்கே கூட்டி வாரும்.
?!!!
தலைவரே, நீர் பணித்த படி செய்தாயிற்று; இன்னும் இடமிருக்கிறது
வழியோரங்களிலும் நடைபாதைகளிலும் போய், எனது வீடு, நிரம்பும் அளவுக்கு
மக்களை வற்புறுத்திக் கூட்டி வாரும்.
அழைக்கப் பெற்றவர் கள் எவரும் என்னு டைய விருந்தைச் சுவைக்கப் போவ தில்லை!


ராபி இயேசு, எங்களை அவமதிக்கத்தான் இக்கதைகளைக் கூறுகி றீர்களா?
இறையரசைப்பற்றி மேன்மையோடு நீர் பேசுவீர் என்று எதிர்பார்த் தோம்.
ஒரு செல்வர் இருந்தார்.
அவர் விலையுயர்ந்த் ஆடை அணிந்து, நாள்தோறும் விருந்துண்டு இன்புற்றிருந் தார்.
அவரது வீட்டு வாயில் அருகே இலாசர் என்ற ஏழை கிடந்தார்.


இலாசர் செல்வ ருடைய மேசையி லிருந்து விழும் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பி னார். ஆனால்...
ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.
செல்வரும் இறந்தார். அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டார். அண் ணாந்து பார்த்துத் தொலை வில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசரை யும் கண்டார்.


தந்தை ஆபிரகாமே, எனக்கு இரங்கும். இலாசர் தமது விரல் நுனியைத் தண்ணீரில் நனைத்து என் நாவைக் குளிரச்செய்ய அவரை அனுப்பும்.
மகனே, நீ உன் வாழ் நாளில் நலன்களையே பெற்றாய், அதே வேளையில் இலாசர் உன் வீட்டு வாயிலில் பசியால் மடிந்தார்.
வாழ்வில் துன்பங்களையே அடைந்த இலாசர், இன்று, நீ வேதனைப்படும்போது ஆறுதல் பெறுகிறார்
அன்றியும், நமக்கிடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குச் செல்ல முடியாது.


தந்தை ஆபிரகாமே, லொசரை என் காதரர்களிடம் அனுப்பி, இந்தத் துன்பமிக்க இடத்திற்கு வராதபடி இருக்க எச்சரிக்கச்செய்யும்..
மோசேயும் இறை வாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு. அவர்களுக்குச் செவி சாய்க்கட்டும்.
அப்படியன்று, தந்தை ஆபிரகாமே! இறந்த ஒருவர் அவர்களிடம் போனால் அவர்கள் மனம் மாறுவார்கள்.
அவர்கள் மோசேக்கும் இறைவாக்கினர்களுக்கும் செவிசாய்க்காவிட்டால் இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்ப மாட்டார்கள்.
நம்மை அவமதிக்கக் கதைகட்டுகிறார் பாருங்கள்!
சதுசேயராகிய நாம் இவ்வுலகோடு எல்லாம் முடிந்துவிடும் என்று நம்புகிறோம். சாவு, விண்ணகம், நரகம் ஆகியவை பரிசேயர்களது கட்டுக்கதையல்லவா?


விருந்து முடிந்து போகும்போது, பரிசேயர்களிடையே ஒரு வாத உரையாடல்.
இந்த மனிதனை நாம் இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது.
பாவிகள் மற்றும் விலக் கப்பட்டவர்களிடையே பிரபல்யமாவதற்காக, நம்மை மீண்டும் மீண்டும் அவமதித்துக்கொண்டே போகிறான்.
எப்போதும் அவர்க ளோடே உண்டு குடிக்கிறான்; சட்டத்தை மதிப்பதில்லை.
என்ன முனங்கிக்கொண்டிருக்கிறீர் கள்? தீய எண்ணங்களை விட் டொழியுங்கள்.
நீர்தான் தீய எண்ணம் கொண் டிருக்கிறீர். நாங்கள் இல்லை.
நீர் விலக்கப்பட்டவர்க ளோடு உண்டும் குடித்தும் அவர்களை மேலும் மோசமாக்குகிறீர்!
இறைவாக்கினர்களும், போதகர்களும் இறைவனது வழிக ளைக் கற்பிக்க வேண் டும்.


ஒருவருக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். இளையவன் தன் தந்தையை நோக்கி....
!!!
இன்னுமொரு கதை? இதுவும் நமக்கு எதிராக இருக்கலாம்!
அப்பா, சொத்தில் எனக்குரிய பங்கை இப்போது தாரும்!
மகனே, ஏன் பங்கு கேட்கிறாய்? இங்கு உனக்கு என்ன குறை இருக்கிறது?
வாதிட எனக்கு நேரமில்லை. எனது பங்கை எனக்குக்கொடும்.
வழக்கமாக, தநதை இறந்தபின்தான் புதல்வர்கள் சொத்தில் பங்கு பெறுவர். ஆனால் கட்டாயமாக விரும்பினால்...



சில நாட்களுக்குள் இளையமகன் எல்லாவறறையும் திரட்டிக்கொண்டு தொலைநாட்டிற்கு நெடும் பயணம் செய்தார்.
நாளைக்கு என் விருந்தில் ஐம்பது பேர் பங்கெடுப்பர். நன்கு பாடி, ஆடக்கூடியவர்க ளைக் கொண்டு வா. இன்றையச் செலவுக்கு இதோ 500 தெனாரிய!.
!
அதற்கு 1000 தெனாரியு வேண்டி யிருக்கும்.
2000 கூடச் செலவழிக்கத் தயாராக இருக்கிறேன். என் விருந்து மிகச்சிறந்த தாக இருக்க வேண்டும்.
!!
சிம்சோன் இன்றைய திராட்சைரசம் மிகச்சுவை யாக இருந்தது.
நம் சிம்சோ னுக்கு ஒரு தெலீலாவைக் கண்டு பிடிக்க ணும்.
நாளை விருந்து இன்னும் சிறப்பாக இருக்கும்.


விரைவில் பணமெல்லாம் செல வழிந்து விட்டது. வாழ வழி யில்லை.
நண்பா, தயவு பண்ணி இரண்டு தெனாரியு தருவாயா?
என்னிடம் பணம் இல்லை யென்று சொன்னேனே!
நான் மிகவும் பசியா யிருக்கிறேன். ஒரு ரொட்டி வாங்கித்தா.
என் வீட்டிற்கு வா! என் தந்தையோடு பேசுகிறேன்.
!?
எதுவும் சும்மா கிடைத்தால் அது மதிக்கப்படுவதில்லை. என் பன்றிகளை மேய். உனக்கு உணவு அளிப்போம்.
?


என்ன? நான் பன்றிகளுக்குக் கொடுத்த தீனியையா தின்கிறாய்? மீண்டும் இப்படிச் செய்யாதே!
?
என்ன வாழ்க்கை! பன்றி யையும் விட நான் மோசமாய்ப் போனேனே!
என் தந்தையின் வீட்டில், கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பன்றிகளிடையில் பசியால் சாகிறேன்.
என் தந்தையிடம் திரும்பிப் போய் மன்னிப்புக் கேட் பேன். அவருடைய கூலி யாள்களுக்குள் என்னையும் வைத்துக்கொள்ளக் கெஞ்சு வேன்.
என் தந் தையே!... எனக்கு எவ்வளவு அன்பு செய்தீர்!



என்னைத் தன் மடியில் அமரச் செய்தார். நான் விரும்பியதெல்லாம் கொடுத்தார். என்னை மனம் வருத்தியதே இல்லை.
ஆனால் அவரிடம் கொடுமையாக நடந்து கொண்டேன். மோசமாக அவர் மனம் வருந்தச் செய்தேன். என்னை மன்னிப்பாரா?
அவர் காலில் விழுந்து மனிப்புக் கேட்பேன். ஒரு கூலியாளாகவா வது என்னை ஏற்றுக்கொள்வார்.
ஒரு புதிய வாழ்க்கை தொடங்கு வேன். ஆண்டவரே! என் கடவுளே! என் தந்தை என்னிடம் அன்பாக இருக்கச்செய்யும்.


என் மகன் பிரிந்து சென்று எவ்வளவு காலமாயிற்று? என்ன செய்து கொண்டிருக்கிறானோ! அவன் நோயில்லாமல் நலமாய் இருக்க வேண்டும்... வந்து கொண்டிருப்பது என் மகன்தானா?.
அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராகப் பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் என்பதற்குத் தகுதியற்றவன்.
!!
என் மகனே, திரும்பி வந்து விட்டாயே, அதுவே போதும். உன்னைப்பற்றி எவ்வளவு கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்!
!
சீக்கிரம், முதல்தரமான ஆடையால் அவனை உடுத்துங்கள். கைக்கு மோதிரமும் காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம்!


அவர்கள் கொண்டாடத் தொடங்கினர். மூத்த மகன் வயலிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்தான்
இந்தச் சத்தமெல் லாம் என்ன?
உம் தம்பி வந்துள்ளார். தலைவர் உமக்காகக் காத்திருக்கிறார்.
எனக்காகக் காத்தி ருக்க வேண்டாம் என்று அவருக்குச் சொல். அந்தப்பயல் இருக்கும் வீட்டில் நான் நுழைய மாட்டேன்.
என் மகனே, உள்ளே வா. இன்று நாம் மகிழ்ந்து கொண் டாட வேண்டும்.
இத்தனை ஆண்டுகளாக நான் அடிமை போன்று உமக்கு வேலை செய்து வருகிறேன். உம் கட்டளை களை ஒருபோதும் மீறியதில்லை.
!


எனக்கு என்ன கொடுத்துள்ளீர்? என் நண்பரோடு மகிழ்ந்து கொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட ஒருபோதும் நீர் கொடுக்கவில்லை.
இந்த உம் மகன், விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துக்களை எல்லாம் அழித்துவிட்டுத் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்துள்ளீர்!
என் மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே.
இப்போது நாம் மகிழ்ந்து கொண்டாட வேண்டும். ஏனெனில், உன் தம்பி இறந்து போயிருந்தான்; மீண்டும் உயிர் பெற்றுள்ளான். காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்.
!
மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சியுண்டாகும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.


உங்கள் விண்ணகத் தந்தை
இரக்கமுள்ளவராக இருப்பது
போல் நீங்களும் இரக்கமுள்ள
வராக இருங்கள். மன்னியுங்
கள். மன்னிப்புப் பெறுவீர்கள்!
!!!
எத்தனை முறை
மன்னிக்க
வேண்டும்? ஏழு
முறையா?
ஏழுமுறை மட்டுமல்ல.
எழுபது தடவை ஏழு
முறை. அரசர் ஒருவர்
தம் பணியாளர்களிடம்
கணக்குக் கேட்க விரும்பி
னார்.
எலிபா பத்துத் தாலந்து
கடன்பட்டிருக்கிறான்.
அவனது உடைமைக
ளையெல்லாம்
பறிமுதல் செய்யுங்
கள்.


அரசே, என்னைப் பொறுத்தருள்க. எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்.
அவ்வளவு பெரிய கடனை உன்னால் திருப்பிக்கொடுக்க முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆகவே, அதை முழுவதும் தள்ளுபடி செய் கிறேன்.
அவன் வெளியே சென்று, தன்னிடம் 100 தெனாரியு கடன்பட்டவனைச் சந்தித்தான்.
?
உன் கடனைக் கட்டு. அதுவும் உடனே!
ஐயா, ஒரு மாதகாலம் கொடுங்கள். கடன் முழுவதையும் கட்டிவிடுகிறேன்.


அரசே, இன்று ஒரு பெரும் கொடுமை நடந்துள்ளது.
அது என்ன
எலிபா தன்னிடம் 100 தெனாரியு கடன் பட்ட ஒருவனைக் கைது செய்து, அவன் மனைவி மக்களை அடிமைகளாக விற்று விட்டான்.
அவனைக் கொண்டு வாருங்கள்.
பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக்கொண்டதால்-உன் கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியது போல, நீயும் உன் நண்பனுக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டுமல்லவா?
!
காவலர்களே, இவனைச் சிறையில் அடைத்து, அவன் கடன் முழுவதையும் அடைக்கும்வரை வதையுங்கள்.
உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர்களை மனமார மன்னிக்காவிட்டால், விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்.


பாவங்கள் செபத்தாலும் தபசாலும் மன்னிக்கப்படும் என்று இஸ்ராயேலின் ராபிகள் போதிக்கின்றனர்.
இரண்டுபேர் கடவுளிடம் வேண்ட கோவிலுக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர், மற்றவர் வரிவசூலிப்பவர்.
பரிசேயர் நின்று கொண்டு தனக்குள்ளே இவ்வாறு வேண்டினார்.
கடவுளே, நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபசாரர் போன்ற மற்றவர்களைப் போலவோ, இந்த வரிவசூலிப்பவரைப் போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன்.


வாரம் இருமுறை நோன்பு இருக்கிறேன். என் வருவாயில் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன்.
கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்.
தாழ்ச்சிமிக்க வரிவசூலிப்பவரது செபம் கடவுளுக்கு விருப்பமானதாய் இருந்தது. பரிசேயருடையதன்று.
!!
தம்மைத்தாமே உயர்த்துவோர், தாழ்த்தப்பெறுவர்; தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்!


அவர்கள் போய்க்கொண்டிருந்தபோது பத்துத் தொழு நோயாளிகள் இயேசுவைத் தேடிவந்தனர்.
இயேசுவே, எங்களுக்கு இரங்கும்!
எங்களைக் குணப்படுத்தும்!
போய்க் குருக்களிடம் உங்களைக் காண்பியுங் கள்.
வழியிலே...
புதுமை, நான் குணமாகி விட்டேன்.
நாம் யாவரும் குணமடைந்து விட் டோம். விரைந்து சென்று குருக்களிடம் சான்றிதழ் பெறுவோம்.
இயேசுவுக்கு நன்றி கூறத் திரும்பிப்போக வேண்டாமா?
இவ்வளவு காலம் தொழு நோயாளியாக இருந்ததற்கு நன்றியா?
நாம் இப்போது குணம் அடைந்து விட்டதால், இயேசு இனி நமக்குத் தேவை யில்லை. மேலும் இப்போது அவரைத் தொடர் வது ஆபத்தாக இருக்கலாம்..



ஆனால், ஒருவர் மட்டும் இயேசுவிடம் திரும்பிவந்தார். அவர் ஒரு சமாரியர்.
மற்ற ஒன்பதுபேர் எங்கே? கடவுளைப் போற்றிப் புகழ இந்த அன்னியரைத்தவிர வேறு எவரும் திரும்பி வரக் காணோமே!
பாஸ்கா விழா நெருங்கிக் கொண்டிருந்ததால், இயேசு எருசலேமுக்குச் செல்லத் தீர்மானித்தார்.
?!!!!
நாம் எருசலேமுக்குச் செல்கிறோம். மானிட மகனைப்பற்றி எழுதப்பட்டவை எல்லாம் நிறைவேறும்.
அவர் பிற இனத்தாரிடம் ஒப்புவிக்கப்படுவார். அவர்கள் அவரை ஏளனம் செய்து, அவமானப்படுத்தி, அவர்மீது துப்புவார்கள்.
அவர்கள் அவரைச் சாட்டையால் அடித்தபின், கொன்று போடுவார்கள். ஆனால், மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுவார்.


அவர்கள் எரிகோவை நெருங்கிவந்தபோது பர்த்திமேயு என்ற பார்வை யற்றவர் வழியோரமாய் உட்கார்ந்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார்.
இந்தக் குருடன்மேல் இரக்கம் வையுங்கள்... இந்தச் சத்தம் என்ன?.
நாசரேத்து இயேசு போய்க்கொண் டிருக்கிறார்.
இயேசுவே, தாவீதின் மகனே! எனக்கு இரங்கும்.
சத்தம் போடாதே! போதகரைத் தொந்தரவு செய் யாதே!
தாவீதின் மகனே! எனக்கு இரங்கும்.
அவனைக் கூட்டி வாருங் கள்.




இயேசுவின் பயணம் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. விலக்கப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றனர் - இறந்தவர்கள் உயிர் பெறுகின்றனர் - எருசலேமுக்குள் அரச நுழைவு.

**அடுத்த பகுதி**

# தாவீதின் மகன்

பொருட்டுப் பெருமைப்பட்டுக் கொண்டு, பிறரை இழிவாகக் கருதுபவர்கள் மீட்பு அடைவது கடினம். நாம் இப்பொழுது கொண்டிருப்பதெல்லாம் இறைவன் கைம்மாறு கருதாது அளித்த கொடைகளாகும். அவற்றிற்காக நாம் எப்போதும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். பத்துத் தொழுநோயாளிகள் பற்றிய நிகழ்ச்சி நன்றியில்லாமல் இருப்பது கொடும் பாவமாகும் என்று காட்டுகிறது. இறைவனை முழு இதயத்தோடு அன்பு செய்வதாலும், நம்மிடம் உள்ளவைகளை யெல்லாம் கொண்டு பிறருக்கு நன்மை செய்வதாலும் நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். கண்பார்வையற்றவர் பற்றிய நிகழ்ச்சி, கிறிஸ்துவை உரத்துக் கூவி அழைத்தால் நாம் வெட்கம் அடைய மாட்டோம் என்று காட்டுகிறது. பார்வைக்காக உரத்து மன்றாடிய பர்த்திமேயு, குணமானவுடன் இயேசுவைப் பின்பற்றினார். இது நமக்கு ஓர் எடுத்துக்காட்டு.

## கேள்விகள்

1. இயேசு பெறப்போகும் திருமுழுக்கு என்ன?
2. இயேசு அமைதியையன்று வாளைக் கொண்டு வந்தார். விளக்குக.
3. நமது விருந்துகளுக்கு யாரை அழைக்க வேண்டும்?
4. செல்வர் ஏன் நரகத்திற்குச் சென்றார்?
5. காணாமற்போன மகனும் அவருடைய சகோதரனும் அடையாளங் கள் ஆவார்கள். விளக்குக.
6. மன்னிக்காத ஊழியன் உவமையிலிருந்து நீர் கற்றுக்கொள்வது என்ன?
7. பரிசேயருடைய செபம் இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்க வில்லை. ஏன்?
8. இறைவனுக்கு நாம் எவ்வாறு நன்றி செலுத்த வேண்டும்?
9. பர்த்திமேயு கற்பிக்கும் பாடம் என்ன?
10. பூமியில் நாம் திருப்பயணிகள். விளக்கு.

*மனனம் செய்க:*

"தம்மைத்தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப்பெறுவர், தம் மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்" (லூக் 14:11).

**Bible Comics - 41: THE WAY:** First published in English and Malayalam by The Bible Apostolate, Tellicherry - 670 101, Script: Michael Karimattam. Illustration: Devassy & Benny. Script & published in Tamil by "Thiagu", Dhyana Ashram, Chennai - 600 028, for TNBCLC Commission for Bible, Tindivanam - 604 002. Copies could be obtained from the Diocesan Pastoral Centres.




**THE ENTIRE BIBLE IN COMICS**

1. Cain & Abel 2. Abraham 3. Jacob 4. Joseph 5. Moses 6. Joshua 7. Samson 8. Ruth 9. Samuel 10. Saul 11. David 12. King David 13. Solomon 14.Elijah 15. Amos 16. Hosea 17. Micah 18. Isaiah 19. Jeremiah 20. Ezechiel 21. Zechariah 22. Jonah 23. Job 24. Tobit 25. Daniel 26. Susanna 27. Esther 28. Judith 29. Maccabeus 30. The Maccabees 31. A. World Awaiting 32. Light of the World 33. The Herald 43. The Prophet 35. The Liberator 36. The One to come 37. Lord of the Universe 38. Son of God 39. Son of Man 40. In the Shadow of the Cross 41. The Way 42. Son of David 43. Bread of Life 44. The Redeemer 45. With Us Forever 46. Tongues of Fire 47. Baptism in Blood 48. The Chosen Vessel 49. Libation 50. Come, Lord Jesus.